நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கரும்புக்கு ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.2,000**

First Published : 20 Aug 2011 11:28:49 AM IST

பெங்களூர், ஆக.19: கரும்புக்கான ஆதரவு விலையாக குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கரும்புக்கு ஆதரவு விலை நிர்ணயிப்பது குறித்து விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சர்க்கரை ஆலை உரிமையாளர்களுடன் முதல்வர் சதானந்தகெப்டா பெங்களூரில் வெள்ளிக்கிழமை முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் ஒரு குவிண்டால் கரும்புக்கு ஆதரவு விலை ரூ.2 ஆயிரமாக நிர்ணயிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முத்தரப்பினரிடையே ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தால் கடந்த சில மாதங்களாக நீடித்துவந்த கரும்பு விவசாயிகள் பிரச்னை முடிவுக்கு வந்துள்ளது.

பேச்சுவார்த்தைக்கு பின்னர் செய்தியாளர்களிடம் போக்குவரத்து மற்றும் உள்துறை அமைச்சர் ஆர்.அசோக் கூறியது:

ஒரு குவிண்டால் கரும்புக்கான ஆதரவு விலை ரூ.2 ஆயிரமாக நிர்ணயிக்க அனைவரும் ஒப்புதல் தெரிவித்ததால், அரசு அதை ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்க்கரை விலையை கண்காணித்து, அதற்கேற்ப கரும்பின் ஆதரவு விலையை உயர்த்துவது குறித்து அரசு முடிவு செய்யும் என்றார் அமைச்சர்.

கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் கே.புட்டணையா கூறுகையில்,கரும்புக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆதரவு விலை முழு திருப்தி அளிக்காவிட்டாலும், நிம்மதியைத் தந்துள்ளது. எதிர்காலத்தில் மீண்டும் ஆதரவு விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கும் என்று அரசு வாக்குறுதி அளித்துள்ளது என்றார்.

**திரிசங்கு நிலையில் ஜென்ம நில விவசாயிகள்!**

First Published : 20 Aug 2011 04:31:08 AM IST



கூடலூர் பகுதியிலுள்ள ஜென்ம நில தேயிலை தோட்டங்கள்.

கூடலூர்: கடந்த 40 ஆண்டுகளாக நிலப் பிரச்னைகள் தீர்க்கப்படாததால் கூடலூர் பகுதி ஜென்ம நில விவசாயிகள் திரிசங்கு நிலையில் உள்ளனர்.

கூடலூர் பகுதியிலுள்ள பெரும்பாலான நிலங்கள் நிலம்பூர் கோவிலக ஜமீன்தார் குடும்பத்துக்கு சொந்தமானதாக இருந்தது. 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு) ரயத்வாரியாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் 80,088 ஏக்கர் பரப்பு நிலத்தை ஜமீன்தார்களிடமிருந்து தமிழக அரசு மீட்டது. இந்தச் சட்டம் 27.11.1977 முதல் அமலுக்கு வந்தது.

இப் பகுதியில் பன்னாட்டு, உள்நாட்டுக் நிறுவனங்கள் தமிழகத்தின் சமவெளிப் பகுதிகளிலிருந்தும், கேரளம், கர்நாடகத்தின் பல பகுதியிலிருந்தும் ஆள்களைக் கொண்டுவந்து தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினார்கள். இந்த தேயிலைத் தோட்டங்களில் தற்போது 33 ஆயிரத்து 600 நிரந்தரத் தொழிலாளர்களும் 60 ஆயிரத்துக்கும் அதிகமான தாற்காலிகத் தொழிலாளர்களும் ஜென்ம நிலத்தை நம்பி வாழ்கின்றனர்.

இது தவிர, 30 ஆயிரத்துக்கும் அதிகமான சிறு மற்றும் குறு விவசாயிகளும் உள்ளனர்.

நிலப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதால் இதை நம்பி வாழ்பவர்களுக்கு அரசு திட்டங்கள் எதுவும் முழுமையாகக் கிடைப்பதில்லை. வனத் துறையிடமிருந்தும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் அச்சுறுத்தல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு நிரந்தர சந்தை வசதி ஏற்படுத்த முடிவதில்லை. வளர்ச்சிப் பணிகள் எதுவும் நடைபெறுவதில்லை. வீடுகளுக்கு மின் இணைப்புகளும் கிடைப்பதில்லை. வங்கிக் கடன் பெறுவதற்கும் தடையாக உள்ளது.

அதே காலகட்டத்தில், அண்டை மாநிலமான கேரளத்தில் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. ஜமீன்தார்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தியவுடன் நிலத்துக்கான இழப்பீடு வழங்கப்பட்டது. அத்துடன், விவசாயிகளுக்கு பட்டா வழங்கி மீதமுள்ள நிலத்தைக் காடுகளாக கேரள அரசு அறிவித்ததால் கேரளத்தில் காடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஆனால், கூடலூரில் ஜமீன்தார்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தி விவசாயிகளுக்கானத் தீர்வை அறிவிக்காமல் திரிசங்கு நிலையில் ஜென்ம நில விவசாயிகள் விடப்பட்டுவிட்டனர். இதனால், காடுகளின் அழிவைத் தடுக்க முடியவில்லை.

இதுகுறித்து ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் டி.பாலகிருஷ்ணன் கூறியதாவது: கூடலூர் ஜென்ம நிலப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் உள்ளதால் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான பயன்களான வீடு, நடைபாதை, போக்குவரத்து, மின் வசதி, பள்ளிக்கூடம், மருத்துவமனை போன்ற வசதிகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பழுது பார்க்கவும் முடிவதில்லை. தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை காரணம் காட்டி வனத் துறை இதனைத் தடுத்து நிறுத்திவிடுகிறது. இதுபோன்ற செயல்களை சமாளிக்க முடியாமலும் பாழடைந்த வீடுகளில் வசிக்க முடியாமலும் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். இதனால் தோட்டத் தொழிலுக்குத் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், இப் பகுதியின் சமூகப் பொருளாதாரம் பாதிக்கப்படுவதோடு, தோட்டத் தொழில் நலிவடையும் ஆபத்தான நிலையும் உள்ளது என்றார்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு, ஜென்ம நிலப் பிரச்னையை தீர்த்து இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதே அனைவரது எதிர்பார்ப்பு.

**சூரியகாந்தி உற்பத்தியை அதிகரிக்க யோசனை**

First Published : 19 Aug 2011 11:16:23 AM IST

பெரம்பலூர், ஆகப். 18: பெரம்பலூர் மாவட்டத்தில் சூரியகாந்தி உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் பெரம்பலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம். செந்தமிழ்ச்செல்வன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் வட்டாரத்தில் சுமார் 130 ஏக்கரில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை வளர்ச்சிப் பருவத்திலும், பூக்கும் தருணத்திலும் உள்ளன. 60- 90 நாள்கள் வயதுடைய சூரியகாந்தி வறட்சியைத் தாங்கி வளரும்.

பொதுவாக சூரியகாந்தியில் மகசூல் குறைவுக்கு பிரதான காரணம் மகரந்தச் சேர்க்கை உண்டாகாமல் இருப்பதுதான். எனவே, புதிய உயர் விளைச்சல் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, மகரந்தச் சேர்க்கையை அதிகரித்து அதிக மகசூல் பெறலாம்.

சூரிய வெளிச்சம் இருக்கும் போது காலை 6.30- 7.30 மணிக்கு தொடங்கி 9.30- 11 மணிவரை தொடர்ந்து மகரந்தத் தூள் வெளி வரும். குறைந்த வயதுடைய உயர் ரகங்களைத் தேர்வு செய்து

தகுந்த பருவத்தில் விதைக்க வேண்டும். அதாவது, பூ பூக்கும் காலம் மழை இல்லாத காலமாக இருக்க வேண்டும். சூரியகாந்தி பயிரிடும் இடத்தில் ஏக்கருக்கு 2 தேன் கூடுகளை அமைத்து, தேனீக்கள் மூலம் அயல் மகரந்த சேர்க்கையை அதிகப்படுத்திட வேண்டும்.

கையினால் மகரந்தச் சேர்க்கை என்ற முறையில் செய்து மகரந்தச் சேர்க்கையை அதிகரிக்கலாம்.

வேலை ஆள்களின் கைகளில் மெல்லிய சுத்தமான வெள்ளைத் துணியைச் சுற்றி, பூவின் மேல்பாகத்தை மெதுவாக ஒற்றிவிடச் செய்ய வேண்டும்.

செடிகளில் பூ பூத்தபின் 2 செடிகளின் பூத்தட்டுகளைப் பற்றி, முகத்தோடு முகம் ஒட்டுவது போல 2 பூத்தட்டுகளையும் பற்றி மெதுவாக ஒன்றுடன் ஒன்று படுமாறு இணைக்க வேண்டும்.

போராக்ஸ் என்ற நுண்ணூட்டத்தை பூக்களில் தெளிப்பதால் விதை உற்பத்தி அதிகரிக்கலாம்.

பெரம்பலூர் வட்டாரத்தில் அய்யலூர், லாடபுரம், ஆலம்பாடி, களரம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் சூரியகாந்தி பயிர் செய்துள்ள விவசாயிகள் விதை உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து, அதிக மகசூல் பெற்றுப் பயனடையலாம்.

தினமலர்

**லாரி வேலைநிறுத்தம்: நாமக்கலில் முட்டைகள் தேக்கம்**

ஆகஸ்ட் 20,2011,16:35



நாமக்கல்: லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக, நாமக்கல் பகுதியில் ரூ. 10 கோடி மதிப்பிலான முட்டைகள் தேக்கமடைந்துள்ளன. தென்மாநிலங்களில் லாரி ஸ்டிரைக் காரணமாக சரக்கு போக்குவரத்து முடங்கியுள்ளது. இந்நிலையில், நாமக்கல் பகுதியில் உற்பத்தியாகும் முட்டைகள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பும் பணி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணை உரிமையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி கூறுகையில், முட்டைகளை பாதுகாத்து வைக்க இயலாத சூழல் நிலவுவதால், ஸ்டிரைக்கில் இருந்து தங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**சர்க்கரை விலையில் மாற்றமில்லை**

ஆகஸ்ட் 20,2011,14:42



புதுடில்லி: தேவையான இருப்பு மற்றும் குறைவான தேவை ஆகிய காரணங்களால் நாட்டில் சர்க்கரை விலையில் எவ்வித மாற்றமுமில்லை. இதுகுறித்து வர்த்தகர்கள் கூறுகையில், நாட்டில் உள்ள குடோன்களில் சர்க்கரை இருப்பு நிலை திருப்திகரமாக இருப்பதாலும், தேவைகள் குறைவாக இருப்பதாலும் சர்க்கரை விலை எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்வதாக தெரிவித்தனர்.

## 5 ஆண்டுகளில் பருத்தி உற்பத்தி 41% அதிகரிப்பு

ஆகஸ்ட் 20,2011,10:34



புதுடில்லி : இந்தியாவின் பருத்தி உற்பத்தி கடந்த 5 ஆண்டுகளில் 41 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. ஒரு ஹெக்டேருக்கு சுமார் 510 கிலோ வரை பருத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நடப்பு ஆண்டில் பருத்தி உற்பத்தி 81 சதவீதம் வரை அதிகரித்து 33.42 மில்லியன் வரை பருத்தி உற்பத்தி செய்து புதிய சாதனை படைக்கப்பட உள்ளது எனவும் மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது. 2005-06 ம் ஆண்டில் ஹெக்டேர் ஒன்றிற்கு 362 கிலோவாக இருந்த பருத்தி உற்பத்தி 2010-11ம் ஆண்டில் 510 கிலோவாக அதிகரித்துள்ளதாக மாநிலங்களுக்கான வேளாண் துறை அமைச்சர் ஹரிஷ் ராவத், ராஜ்ய சபாவில் இத்தகவலை தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டை விட 2010-11ம் ஆண்டில் 9 சதவீதம் அதிகமாக 11.01 மில்லியன் பரப்பளவில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சம்பா பட்டத்துக்கான விதைநெல் தயார்: வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,00:08 IST

மோகனூர்: "சம்பா பட்டத்துக்கான சான்று பெற்ற நெல் விதைகள், தேவையான அளவு இருப்பு உள்ளது' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்ராஜு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: முன் சம்பா மற்றும் சம்பா சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகங்கள், வெள்ளை பொன்னி, ஏ.டி.டி.39, ஏ.டி.டி.45, ஐ.ஆர்.20 மற்றும் ஏ.எஸ்.டி.19 ஆகிய சான்று பெற்ற நெல் விதைகள், போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களுக்கு தேவையான நெல் விதைகளை மானிய விலையில் பெற்று பயன்பெறலாம். "திருந்திய நெல் சாகுபடி' முறையில் சாகுபடி செய்ய, ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ நெல் விதை போதுமானது. நாற்று விடும்போது விதை நேர்த்தி செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா உயிர் உரங்களை, மோகனூர் வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,23:33 IST

பொங்கலூர்:மக்காச்சோளத்துக்கு விலை உயர்வால், பொங்கலூர் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.மக்காச்சோளம் வைகாசி, ஆடி, கார்த்திகை ஆகிய பருவங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. வழக்கமாக வட கிழக்கு பருவ மழை பெய்யும் ஆடி பட்டத்தில் அதிகமான விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்வது வழக்கமாக உள்ளது. இந்த சீசனில் அதிக உற்பத்தி காரணமாகவும், புற்கள் வளர்ந்து கால்நடை தீவனத்திற்கான தேவை குறைவதாலும், மக்காச்சோளம் கொள்முதல் விலை ஒரு குவிண்டால் 900 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய்க்குள் இருக்கும். தற்போது, வைகாசி பட்டத்தில் சாகுபடி செய்த மக்காச்சோளம் அறுவடை பருவத்தை எட்டியுள்ளது.

இந்த பட்டத்தில் உற்பத்தி குறைவாக உள்ளது; பெருகி வரும் ஈமு, பிராய்லர் கோழி பண்ணை நுகர்வு காரணமாகவும், மழை பெய்யாததால் ஏற்பட்ட வறட்சியாலும், விவசாயிகள் கால்நடை தீவனத்திற்கு அதிகமாக மக்காச்சோளத்தை உபயோகிக்கின்றனர். இதனால் மக்காச்சோளம்

தேவை அதிகரித்துள்ளது.
அதிகரித்து வரும் நுகர்வு, உற்பத்தி குறைவு உள்ளிட்ட காரணங்களால், மக்காச்சோளத்திற்கு விலை உயர்ந்து வருகிறது. தற்போது ஒரு குவிண்டால் மக்காச்சோளம் 1,300 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பருத்தி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,01:02 IST

அவிநாசி:அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்தில் அனைத்து ரகங்களின் விலை உயர்ந்துள்ளது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் சங்கத்தில் நடந்த இவ்வார பருத்தி ஏலத்துக்கு 1,613 மூடைகள் வரத்தாக இருந்தது. அனைத்து ரக பருத்தியும், குவிண்டாலுக்கு ரூ.150 முதல் ரூ.220 வரை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அனைத்து ரகங்களின் விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,500 முதல் ரூ.4,100 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பி.டி., ரூ.3,700 முதல் ரூ.4,220 வரை, எம்.சி.யு.5 மற்றும் சுரபி ரூ.3,800 முதல் ரூ.4,250 வரை, டி.சி.எச்., ரூ.4,100 முதல் ரூ.4,350 வரை, மட்டம் ரூ.2,100 முதல் ரூ.2,400 வரை.
கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில், ""கடந்த வார அளவே வரத்து இருந்தது. இருப்பினும், அனைத்து ரகங்களும் ரூ.200 அதிகமாக விலைக்கு போனது. 70 விவசாயிகள், 17 வியாபாரிகள் பங்கேற்றனர். ரூ.21.63 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது,"என்றார்.

**விவசாயிகளுக்காக "ஹைடெக்' "இ-வேளாண்மை' திட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,01:45 IST

மதுரை : தமிழ்நாடு வேளாண்மை பல்கலை நீர்வள நிலவள திட்டத்தின் கீழ், இணையதள வேளாண்மை திட்டம் தெற்காறு பாசன உபவடிநில பகுதியில் துவக்கப்பட்டுள்ளது. இதற்குட்பட்ட திருப்பரங்குன்றம், திருமங்கலம், கள்ளிக்குடி, செல்லம்பட்டி பகுதியில் வேளாண் பிரச்னைகளுக்கு தீர்வு; தகவல் தொடர்பு தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தும் முறை பற்றி பயிற்சி அளித்தல்; இ-வேளாண்மை தாக்கத்தை ஆராய்தல் நோக்கம். விவசாய விஞ்ஞானிகள், விவசாயிகள், விரிவாக்க பணியாளர்கள் இணைந்து செயல்படுவர். பயிர்களில் ஏற்படும் பிரச்னைகளின் தன்மையை ஆராய்ந்து, விவசாயிகளுக்கு உடனுக்குடன் பரிந்துரை தெரிவிப்பர். அறிவுசார் வேளாண்மை மூலம் அதிக மகசூல் பெறலாம். விவசாயிகளின் நில அளவைப்

பொறுத்து உறுப்பினர் சந்தா 50 முதல் 150 ரூபாய் வசூலிக்கப்படும். இது வேளாண் பயனாளிகள் சங்கம், வேளாண் அறிவியல் நிலையம் கூட்டு கணக்கில் வங்கியில் வைக்கப்படும். சந்தேகங்கள் அல்லது வேளாண் பிரச்னைகளை மொபைல்போன் மூலம் களப்பணியாளர்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம். ரகம் தேர்வு, சந்தை தகவல்களை அறியலாம். களப்பணியாளர்கள் பாதிக்கப்பட்ட பயிர்களை மின்னணு கருவி மூலம் படம் பிடிப்பர். "லேப்டாப்' மூலம் இன்டர்நெட்டில் வேளாண் பல்கலை விஞ்ஞானிகளுக்கு அனுப்பப்படும். அன்று பகல் 2 முதல் 3 மணிக்குள் விஞ்ஞானிகள் களப்பணியாளர்கள் மூலம் அல்லது விவசாயிகளுக்கு மொபைல்போன் மூலம் பரிந்துரை வழங்கப்படும். இது உறுப்பினர் அட்டையில் பதிவு செய்யப்படும். தலைவர், தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்-தெற்காறு உபவடி நீர்ப்பகுதி, வேளாண் அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104, 0452-242 2955 ல் தொடர்பு கொள்ளலாம்.

**மூங்கில் சாகுபடிக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,01:45 IST

மதுரை : மூங்கில் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், எக்டேருக்கு ரூ.4000 மானியம் வழங்கப்படுகிறது.2011 - 12ம் ஆண்டில் 20 எக்டேருக்கு மானியம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மாசுபடுவதை மூங்கில் தவிர்க்கிறது. மூங்கில் சார்ந்த உபதொழில்கள் பெருகும் வாய்ப்புள்ளது. வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில் பதிவு செய்து, பயன்பெறலாம் என, துணை இயக்குனர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**10 ஆயிரம் வாழை சேதம் கணக்கெடுப்பு தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2011,00:16 IST

ஈரோடு: சூறாவளியுடன் பெய்த கன மழையில் சேதமடைந்த வாழை மரங்கள் குறித்து தோட்டக்கலைத்துறை கணக்கு எடுத்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் மூன்று தினங்களுக்கு முன் சூறாவளியுடன் கன மழை பெய்தது. கோபி, நம்பியூர் பகுதியில் பயிரிட்டிருந்த வாழை மரங்கள் கடும் சேதமடைந்தன. சேதமடைந்த பயிர்களை கலெக்டர் காமராஜ் பார்வையிட்டார். வேளாண், தோட்டக்கலைத் துறை மூலம் சேதமடைந்த பயிர்களை கணக்கெடுக்க உத்தரவிட்டார். தோட்டக்கலைத்துறை நேற்று நடத்திய கணக்கெடுப்பில், 10 ஆயிரம் வாழை மரங்கள்

சேதமடைந்திருக்கலாம் என்று தெரியவருகிறது. தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட் கூறுகையில், ""சேதம் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கலெக்டர் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்து, இழப்பீடு வாங்கி தர முயற்சி எடுக்கப்படும்,'' என்றார்.

**தோட்டக்கலைத்துறையில் மானியத்தில் இடு பொருள்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2011,22:41 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:தோட்டக்கலைத்துறையில் தேசிய வேளாண் உற்பத்தி திட்டத்தில் இந்தாண்டு காய்கறி, பூ வகைகள் உற்பத்தி திறன் அதிகரிப்பு திட்டத்தில் 50 சத மானியத்தில் இடு பொருள்கள் வழங்கப்படுகிறது.உயர் தொழில் நுட்ப திட்டத்தில் மா, சப்போட்டா, முந்திரி, புளி, பழ மரங்கள் அடர் நடவு செய்ய 1 எக்டேருக்கு 7,500 ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.இந்தாண்டு முதல் காய்கறி, பூ வகைகள் உற்பத்தி திறன் அதிகரிப்பு திட்டத்தில் ஒரு எக்டேர் கத்திரி, வெண்டைக்கு 15 ஆயிரம் ரூபாய் வரையும், வெங்காயம், மிளகாய் ஆகியவற்றுக்கு 12,500 ரூபாயும், பூ வகைகளுக்கு 12 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள விதை, உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவைகள் மானியத்தில் வழங்கப்படும். விவசாய இயந்திரங்கள் வாங்குவதற்கு அதிகபட்சம் 17,500 ரூபாயும் மானியமாக வழங்கப்படவுள்ளது.